PERIYAR UNIVERSITY
PERIYAR PALKALAI NAGAR
SALEM – 636 011

DEGREE OF MASTER OF ARTS

CHOICE BASED CREDIT SYSTEM

SYLLABUS FOR M.A. TAMIL

FOR THE STUDENTS ADMITTED FROM THE ACADEMIC YEAR 2021 – 2022 ONWARDS

விதிமுறைகள்

1. சேர்க்கைத் தகுதி:

பெரியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கலையியல் இளையர் (B.A., Branch XII Tamil), இலக்கியவியல் இளையர் (B.lit.) பட்டம் பெற்றவர்களும் கலையியல் இளையர் (B.A.,) அறிவியல் இளையர் பட்டப்படிப்புகளில் (B.Sc.,) பகுதி – 1 இல் தமிழ் பயின்று தேர்ச்சி பெற்றவர்களும், பெரியார் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவால் ஏற்கப்பட்ட பிற பல்கலைக்கழகங்களில் மேற்குறிப்பிடப்பட்ட பட்டங்களுக்கு இணையான பட்டம் பெற்றவர்களும் தமிழ் முதுகலையில் (M.A.,) சேரத் தகுதி உடையவர்கள். தமிழ்க் கலையியல் இளையர் (B.A., Branch XII Tamil), இலக்கியவியல் இளையர் பட்டம் (B.lit.) பாரதிதாசன் பல்கலைக்கழகம் வழங்கும் மூன்றாண்டுப் புலவர் பட்டம் (இவர்கள் தொல்பொருளியல், நாடகவியல் ஆகிய இருதாள்களைக் கூடுதலாக எழுதித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.) பெற்றவர்களுக்குச் சேர்க்கையில் முன்னுரிமை வழங்கப்பெறும். பிற கலையியல் இளையர் பட்டங்களையும் (B.A, B. Com.) அறிவியல் இளையர் பட்டங்களையும் (B.Sc.) பெற்றவர்கள் பகுதி – 1 தமிழில் ஐம்பது விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் அவசியம்.

2. காலஅளவு

தமிழ் முதுகலைப் படிப்பிற்குரிய காலஅளவு இரண்டு கல்வி ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு கல்விஆண்டும் இரண்டு பருவங்களைக் கொண்டது. ஒவ்வொரு பருவமும் 90 பணிநாட்களைக் கொண்டதாக அமையும்.

ஒவ்வொரு பருவ இறுதியிலும் தேர்வு நடைபெறும். முதல் மூன்று பருவங்களில் ஒவ்வொரு பருவ இறுதியிலும் ஐந்து ஐந்து தாள்களுக்கான தேர்வு நடைபெறும். நான்காம் பருவ இறுதியில் மூன்று தாள்களுக்கான தேர்வு நடைபெறும். தேர்வு தொடங்குவதற்கு முன்னர் ஆய்வேடு முடித்தளிக்கப் பெறுதல் அவசியம். இந்த ஆய்வேடு 200 மதிப்பெண்களை உடைய தாளாக அமையும். ஒவ்வொரு பருவத்திலும் (முதல் மூன்று பருவங்களில்) தேர்ச்சி பெறாத தாள்களுக்கான தேர்வுகளை அடுத்தடுத்த பருவங்களில் எழுத மாணவர்கள் அனுமதிக்கப் பெறுவர்.

3. தேர்ச்சிக்கான மதிப்பெண்

ஒவ்வொரு தாளிலும் தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் குறைந்தது 38 மதிப்பெண்களைப் பெறுதல் வேண்டும். 25 அகமதிப்பெண்களில் குறைந்தது 12 மதிப்பெண்களைப் பெற வேண்டியது அவசியம்.

4. சிறப்பு, முதல், இரண்டாம் வகுப்புப் பகிர்வு

200 மதிப்பெண்களுக்கான ஆய்வேடு உள்ளிட்ட இருபது தாள்களிலும் 60 விழுக்காட்டு மதிப்பெண்களும் அதற்கும் மேலான மதிப்பெண்களும் பெற்றவர் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் ஆவார். எழுபத்தைந்து விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்றவர் சிறப்பு நிலைத்தேர்ச்சி பெற்றவர் ஆவார். 50 விழுக்காடு முதல் 59 விழுக்காடு வரையிலான மதிப்பெண் பெற்றவர் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் ஆவார்.

5. அகமதிப்பீடும் வினாத்தாள் அமைப்பும்

அகமதிப்பீடு

ஒவ்வொரு பாடத்திற்கும் அகமதிப்பீட்டிற்கு 25 மதிப்பெண்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும்.

1. மாதாந்திரத் தேர்வு – 10 மதிப்பெண்கள்

2. ஒப்படைப்புக் கட்டுரைகள் – 5 மதிப்பெண்கள்

3. கருத்தரங்கக் கட்டுரைகள் – 5 மதிப்பெண்கள்

4. வருகைப்பதிவு – 5 மதிப்பெண்கள்

மொத்தம் – 25 மதிப்பெண்

வினாத்தாள் அமைப்பு ஒவ்வொரு வினாத்தாளும்

பகுதி – அ (தெரிவு சார் விடைகளை தேர்ந்தெடுக்கவும்) 15 x 1 = 15

பகுதி –ஆ (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்க) 2x5=10

பகுதி - இ (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க) 5X10=50

எழுத்துத் தேர்வு 75 மதிப்பெண்களைக் கொண்டதாக அமையும். ஒவ்வொரு நாளுக்கான தேர்வுக் கால அளவு முன்று மணி நேரம் ஆகும்.

பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் - 636011

தமிழ் முதுகலை – பாடத்திட்டம்

(2021-2022)-ஆம் ஆண்டு முதல் சேரும் மாணவர்களுக்கானது)

வ.எண்	குறியீட்டு எண்	தாள்	மணிகள்	அக மதிப்பீடு	தேர்வு மதிப்பெண்	மொத்த மதிப்பெண்	மதிப்பீட்டு அலகு (Credit)
பருவம் I							
1.	TMLC01	தாள்:1 தொல்காப்பியம் எழுத்ததிகாரம்	6	25	75	100	5
2.	TMLC02	தாள்:2 இக்கால இலக்கியம்	6	25	75	100	5
3.	TMLC03	தாள்:3 சிற்றிலக்கியங்கள்	6	25	75	100	5
4.	TMLC04	தாள்:4 தமிழர் கலையும் பண்பாடும்	6	25	75	100	5
5.	TMLC05	தாள்:5 இலக்கண வரலாறும் உரை வரலாறும்	6	25	75	100	4
			30			**500**	**24**

வ.எண்	குறியீட்டு எண்	தாள்	மணிகள்	அக மதிப்பீடு	தேர்வு மதிப்பெண்	மொத்த மதிப்பெண்	மதிப்பீட்டு அலகு (Credit)
பருவம் II							
6.	TMLC06	தாள்:6 தொல்காப்பியம் சொல்லதிகாரம்	6	25	75	100	5
7.	TMLC07	தாள்:7 காப்பியங்கள்	6	25	75	100	5
8.	TMLC08	தாள்:8 சமய இலக்கியங்கள்	6	25	75	100	5
9.	TMLC09	தாள்:9 பண்பாட்டு மானிடவியல்	6	25	75	100	4
10.	EDC	தாள்:10 நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் / கணினி ஓர் அறிமுகம் / பயன்பாட்டுத் தமிழ்	4	25	75	100	4
11.	Human Rights	தாள்:11 மனித உரிமைகள்	2	25	75	100	
			30			**600**	**23**

வ.எண்	குறியீட்டு எண்	தாள்	மணிகள்	அக மதிப்பீடு	தேர்வு மதிப்பெண்	மொத்த மதிப்பெண்	மதிப்பீட்டு அலகு (Credit)
பருவம் III							
12.	TMLC012	தாள்:12 தொல்காப்பியம் பொருளதிகாரம்	6	25	75	100	5
13.	TMLC013	தாள்:13 தமிழக வரலாறும் பண்பாடும்	6	25	75	100	5
14.	TMLC014	தாள்:14 பெரியாரியல்	6	25	75	100	5
15.	TMLC015	தாள்:15 திறனாய்வுக் கோட்பாடு	6	25	75	100	4
16.	TMLC016	தாள்:16 கல்வெட்டியல்	6	25	75	100	4
			30			**500**	**23**

வ.எண்	குறியீட்டு எண்	தாள்	மணிகள்	அக மதிப்பீடு	தேர்வு மதிப்பெண்	மொத்த மதிப்பெண்	மதிப்பீட்டு அலகு (Credit)
பருவம் IV							
17.	TMLC017	தாள்:17 சங்க இலக்கியம்	6	25	75	100	5
18.	TMLC018	தாள்:18 பல்நோக்குப் பார்வையில் திருக்குறள்	6	25	75	100	5
19.	TMLC019	தாள்: 19 ஆராய்ச்சி அறிமுகம்	6	25	75	100	4
20.	TMLC020	தாள்:20 ஆய்வேடு	12			200	6
			30			**500**	**20**
			120			**2100**	**90**

தமிழ் முதுகலை முதற்பருவம்

தாள் 1 - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (TMLC 01)

நோக்கம்:

தமிழ் மொழியில் முதன் முதலில் முழுவதுமாக கிடைக்கப்பெற்ற இலக்கண நூலான தொல்காப்பியத்தை அறிமுகம் செய்தல்.

தமிழ் மொழியில் சொற்கள் தொடர்கள் போன்றவற்றை உருவாக்கும் போது எழுத்துக்களின் செயல்பாடுகளை மொழியை பொருள் குழப்பம் இன்றியும் தொடர் குழப்பம் இன்றியும் எழுத மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல்.

சிறப்பு நோக்கம்:

தமிழில் உள்ள எழுத்துக்களின் வகையையும் மொழியையும் திறம்பட கையாளும் முறையையும் கற்றல்.

தமிழ் இலக்கணத்தின் அடிப்படையை உணர்ந்து கொள்வதன் மூலம் பிற மொழியை எளிதில் கற்கலாம் இலக்கணத்தை புரிந்து கொண்டு நவீன இலக்கணத்தை உருவாக்கலாம்

அலகு - 1. நூன்மரபு, மொழிமரபு

அலகு - 2 பிறப்பியல், புணரியல்

அலகு - 3 தொகைமரபு, உருபியல்

அலகு - 4 உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல்.

அலகு - 5 குற்றியலுகரபுணரியல்

பாடநூல்

தொல்காப்பியம் -ஆராய்ச்சிக காண்டிகையுரை எழுத்ததிகாரம், 1988 பதிப்புத்துறை, பெரியார் பல்கலைக்கழகம்.

பார்வை நூல்கள்

இலக்கணச் சிந்தனை, 1998 அ. சீனிவாசன், தூ சேதுபாண்டியன் (தொகுப்பாசிரியர்கள்) இலக்கணத்துறை, தமிழியற் புலம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

எழுத்தியல் 1975, சூ. இன்னாசி, தமிழரசன் பதிப்பகம், பாளையங்கோட்டை.

எழுத்திலக்கணக கோட்பாடுகள், 1980, சே. வை. சண்முகம், அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

தமிழ் இலக்கண மரபுகள் கி.பி.800 - 1400 2000 இலக்கண உரைகளும் நூல்களும், இரா சீனிவாசன், தி பார்க்கர், சென்னை.

தமிழ் இலக்கணக் கோட்பாடுகள் 1989, பொற்கோ, தமிழ் நூலகம், சென்னை.

தமிழிலக்கண நூண்மைகள் 2000 ச.பாலச்சந்திரன், தாமரை வெளியீட்டகம் 367 மேலவீதி, தஞ்சாவூர்.

வினாக்கள் பாட நூல்களில் இருந்து மட்டுமே அமைத்தல் வேண்டும் எல்லா அலகுகளையும் தழுவி வினாக்கள் அமைத்தல் வேண்டும்

தாள் - 2 இக்கால இலக்கியம் (TMLC-02)

பொது நோக்கம்:

இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் இக்கால தமிழ் இலக்கியங்களை அறிந்து கொள்ள வாய்ப்பு அளித்தல். கவிதை புதினம் சிறுகதை நாடகம் ஆகிய படைப்பியல் வகைகளைப் பற்றிய பரந்துபட்ட புலமையை பெருக்குதல்.

சிறப்பு நோக்கம்:

இக்கால தமிழ் இலக்கியங்களில் உள்ளடக்கம் வெளியீட்டு நெறி படைப்பியல் கொள்கை ஆகியவற்றை அறியச் செய்தல்.

இலக்கிய கொள்கைகளின் அடிப்படையில் இக்கால இலக்கியங்களை திறனாய்வு செய்ய பயிற்சி அளித்தல்.

இலக்கிய வகை கோட்பாடுகள் பற்றிய கருத்துக்களை படைப்பாளர்களின் வழி நின்று ஆராய்தல்.

அலகு 1 மரபுக் கவிதைகள்

பாரதியார் - சுயசரிதை

பாரதிதாசன் - குடும்ப விளக்கு பாகம் II

அலகு 2 புதுக்கவிதைகள்

சிற்பி - சர்ப்பயாகம்

தமிழச்சி தங்கபாண்டியன் - எஞ்சோட்டுப் பெண்

தீப்பெட்டி பொன்வண்டு - வருகை - மௌனம்- சமன் - பொங்கல் - பேசாத மொழி - நீள் ஒட்டம் - கைதி - சூழல்

இரா மீனாட்சி - உதய நகரிலிருந்து

என்றமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும் - அவன் வரும் வழியிலே சேறு தங்கலாகாது - தமிழர்கள் ஈரத்திலேயே நடக்கிறார்கள் - நிழலின் சூத்திரங்கள் - கிளை பல தாங்கும் போது - குருவி நீதி - மலையும் நானும்

அலகு 3 நாவல்

சின்னப்பபாரதி - பவளாயி (பாவை பப்ளிகேஷன்ஸ்)

அலகு 4 சிறுகதை

அப்பத்தாளும் ஒரு கல்யாணமும். மா. நடராசன் (என்சிபிஎச் வெளியீடு)

அலகு 5 நாடகம்

கொங்கைத்தீ - இந்திராபார்த்தசாரதி

பார்வை நூல்கள்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் 1973. மா ராமலிங்கம் தமிழ் புத்தகாலயம் சென்னை.

தமிழ் நாவல் இயல் 1986. தா.வே வீராசாமி, தமிழ் புத்தகாலயம், சென்னை.

தமிழச்சி தங்கபாண்டியன் - *எஞ்சோட்டுப் பெண்* - மித்ரா வெளியீடு (காவ்யா பதிப்பகம்)

இரா. மீனாட்சி - உதய நகரிலிருந்து - கபிலன் பதிப்பகம் புதுவை - 8.

சிற்பி பாலசுப்ரமணியம் *சர்ப்பயாகம்*

தமிழ் நாவல் இலக்கியம் - திறனாய்வு கட்டுரைகள் , 1999.

க. கைலாசபதி இ குமரன் பப்ளிகேஷன்ஸ் , சென்னை.

தமிழ் நாவல் வளர்ச்சி (1900 -1940) புதிய ஒளியில் இருண்டகாலம் 2003.

சுப. சேதுப்பிள்ளை, தி பார்க்கர், சென்னை.

தமிழ் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், 1967 கா. சிவத்தம்பி, சென்னை.

தற்காலத் தமிழ் இலக்கியம் இரா. தண்டாயுதம் தமிழ் புத்தகாலயம் சென்னை.

இருபதாம் நூற்றாண்டு தமிழ் கவிதை, சிற்பி, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியீடு.

கொங்கைத்தீ , இந்திரா பார்த்தசாரதி தமிழ்ப் புத்தகாலய வெளியீடு.

புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் 1992 வல்லிக்கண்ணன், அன்னம் வெளியீடு, சிவகங்கை.

புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை , 1999. பாலா, அகரம், கும்பகோணம்.

- வினாக்கள் பாடநூல்களில் இருந்து மட்டுமே அமைத்தல் வேண்டும்

தமிழ் முதுகலை – முதற்பருவம்

தாள் - 3 சிற்றிலக்கியங்கள் **[TML03]**

நோக்கம்: பேரிலக்கியங்களிலிருந்து வேறுபட்டு மலர்ந்து தமிழின் இலக்கியப்பரப்பை வளப்படுத்தியுள்ள சிற்றிலக்கியங்களை அறிமுகம் செய்து ஒவ்வொன்றின் தனித்தன்மைகளையும் சமுதாய இருப்பு நிலைகளையும் விளக்குதல்

அலகு - 1

நந்திக்கலம்பகம் - 51 முதல் 113 பாடல்கள் வரை

அலகு - 2

கலிங்கத்துப்பரணி – ஜெயங்கொண்டார்

காடுபாடியது, தேவியைப் பாடியது, இந்திரசாலம்

அலகு - 3

திருக்குற்றாலக் குறவஞ்சி – முழுவதும்

திரிகூடராசப்பக் கவிராயர்

அலகு - 4

தமிழ்விடுதூது – முழுவதும்

அலகு - 5

விக்கிரமசோழன் உலா – முழுவதும்

இயல்களின் நோக்கம்:

இயல் : 1

நந்தி மன்னனின் வீரம், புகழ், கொடை போன்றவற்றை அறியச் செய்தல், தமிழர்களின் சிறப்பை வெளிப்படுத்தி புத்துணர்வூட்டுதல்.

இயல் : 2

பரணி இலக்கியத்தின் தனித்தன்மைகளை வெளிப்படுத்தி கற்போருக்கு கற்பனைத் திறனை வளர்த்தல்.

இயல் : 3

குறவஞ்சியின் வாழ்க்கை முறையையும் இறைவழிபாட்டின் சிறப்புகளையும் அடித்தட்டு மக்களின் நிலையையும் புலப்படுத்துதல்.

இயல் : 4

தமிழ் நூல்களையும் தமிழின் சிறப்புகளையும் அறியச் செய்தல் தமிழை காலங்கடந்து நிலைபெறச் செய்தல்.

இயல் : 5

உலா இலக்கியச் சிறப்புகளையும் சோழர்களின் வரலாறுகளையும் அறியச்செய்தல், தன்னிகரில்லா தலைமைப் பண்பை உருவாக்குதல்.

பார்வை நூல்கள்:

- சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (ஐந்தாவது மாநாடு), 1962. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சிற்றிலக்கிய சோலையிலே, Dr. தொ.ராஜேஸ்வரி அன்னக்கிளி, தொ. காவ்யா வெளியீடு, சென்னை.
- பரணி இலக்கியம், 1980. சோம. இளவரசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- பிரபந்தம், திராவிடமொழி இலக்கியங்கள் அறிமுகம், 1983. ச.வே. சுப்ரமணியன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக் - 185-236.

தமிழ் முதுகலை - முதற் பருவம்

தாள் -4 தமிழர் கலையும் பண்பாடும்

நோக்கம் :

1. ஒரு நாட்டின் வரலாற்றில் கலையும் பண்பாடும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.
2. இலக்கியப் படைப்புகளுக்கான சமுதாய சூழல்களை எடுத்துரைப்பது.
3. கலைகளின் வளர்ச்சிக்கு பின் உள்ள சமுதாய கூறுகளை ஆராய்வது
4. சமுதாய பண்பாட்டு மாற்றங்களை உணர்த்துவது
5. பண்டைய தமிழர்களின் கலையினையும் பண்பாட்டினையும் மாணவர்களுக்குச் சான்றுகளுடன் எடுத்துரைத்து விளக்குதல்.

அலகு -1 இசைக்கலை (அறிமுக நிலையில்)

அழகுக்கலைகள் பற்றிய பொது அறிமுகம் - இசைக்கலை வரலாறு - தொல்காப்பியம் இசைச் செய்திகள் சங்ககாலம் பாணர்மரபு, இசைக்கருவிகள், இசைநூல்கள் - சிலப்பதிகாரமும் இசையும் சமணமும் இசையும் பல்லவர்கால இசை மன்னர்களும் இசையும் - சோழர்கால இசை -பிற்கால இசை - தமிழிசைச் சங்கம், இசைத்தமிழ் நூல்கள்.

அலகு - 2 கூத்து, நாடகம் (அறிமுகநிலை)

கூத்துக்கலை வரலாறு - சங்ககாலம் வள்ளிக்கூத்து குரவை வெறியாட்டு துணங்கை முதலானவை பொருநர் விறலியர் - சிலப்பதிகாரமும் கூத்தும் நாட்டிய மேடை பதினோராடல் - பல்லவர் காலம் முதலான நாடகக்கலை - தொல்காப்பியம் முதலானவற்றில் நாடகச் செய்திகள் - நாடகம் நாட்டியம் எனும் பொருளில் - நான்குவகை நாடகம் - 24 வகை மெய்ப்பாடுகள் - ஆடுகளம் ஆடுகள் அமைவுகள் - 10ஆம் நூற்றாண்டு நாடகம் - 19 ஆம் நூற்றாண்டு நாடகம் - நாடக சபைகள் - 20 ஆம் நூற்றாண்டு நாடக வரலாறு.

அலகு - 3 கட்டடக்கலை

சங்ககாலம் - கோயில் கட்டடங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலக் கோயில்கள் - ஆலக் கோயில், இளங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், மணிக்கோயில், பெருங்கோயில் பற்றி அடிப்படைச் செய்திகள் - பல்லவர்காலம் முதல் நாயக்கர்காலம் வரையிலான கோயில்கள் - குடைவரைக் கோயில்கள்,

இதரவடிவக் கோயில்கள், கற்றளி, காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்தப்பெருமாள் கோயில்கள், கற்றளி இரண்டாம் நிலை, முற்காலச்சோழர் கோயில்கள் - தஞ்சைப் பெரியகோயில் கட்டடக்கலைச் சிறப்புகள் - பாண்டியர் காலக் கோயில்கள்- விசயநகரக்காலம், நாயக்கர்காலம், சார்கோயில்கள்.

அலகு - 4 ஓவியக்கலையும் சிற்பக்கலையும்

ஓவியம்

சங்ககாலம் - சங்ககாலத்தின் பின்னான ஓவியக்கலை - பனைமலை ஓவியம் காஞ்சிபுரம் திருமலைப்புரம் சித்தன்னவாசல் தாமரைக்குளம் - சோழர்கால ஓவியம் கயிலைக் காட்சி நாட்டிய நங்கையர் - விசயநகரத்தார் கால ஓவியம் - மதுரை நாயக்கர் கால ஓவியம் - பிற்காலம்.

சிற்பம்

சங்ககாலம் மண்ணீட்டாளர் அகழாய்வும் மண் உருவங்களும் சுதைச்சிற்பங்கள், - பல்லவர்காலச் சிற்பம் கற்சிற்பம் மாமல்லபுரச் சிற்பங்கள் - பாண்டியர் சிற்பம் - சோழர் காலச்சிற்பம் - விசய நகரத்தார் காலச் சிற்பம் இருவகைச் சிற்பம் முழுச்சிற்பம் புடைப்புச்சிற்பம் - யவனச்சிற்பமும் இந்தியச் சிற்பமும் - நால்வகைச் சிற்பம் தெய்வம் இயற்கை கற்பனை படிமை உருவம் - சிற்பசாத்திரங்கள் - செப்புத் திருமேனிகள்.

அலகு - 5 சமயங்கள் காட்டும் பண்பாட்டு வரலாறு

சங்கத்தமிழர் சமயநெறி - சைவநெறி - தமிழர்பண்பாட்டில் வைணவம் - தமிழர் பண்பாட்டில் சமணம் - தமிழர் பண்பாட்டில் பௌத்தம் - தமிழர் பண்பாட்டில் இசுலாம் - தமிழர் பண்பாட்டில் கிறித்தவம் - இந்திய நாகரிகத்தில் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் - ஆங்கில ஆட்சியின் செல்வாக்கு - மராட்டியப் பண்பாடு - பண்பாட்டு ஊடாட்டம்.

பாடநூல்கள்

தமிழர் நாகரிகமும் பண்பாடும், 1994. அ.தட்சிணாமூர்த்தி, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், 2004. மயிலை. சீனி. வேங்கடசாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பார்வை நூல்கள்

1. சிற்பக்கலை, 2003, செ.வைத்தியலிங்கம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
2. தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், 1983. கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
3. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், 1971. கே.கே.பிள்ளை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.
4. தமிழர் பண்பாடும் வரலாறும், 1997, நா.வானமாமலை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
5. தமிழும் பிற பண்பாடும், 1999, தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
6. நுண்கலைகள், 2001. மயிலை .சீனி. வேங்கடசாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
7. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், 1999, க.கைலாசபதி, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.
8. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், 1988. சாமி சிதம்பரனார், சாமிசிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை.

- வினாக்கள் பாடநூல்களிலிருந்து மட்டுமே அமைதல் வேண்டும்.

நூல் – 5 இலக்கண வரலாறும் உரை வரலாறும்(TMLE 05)

நோக்கம் : தமிழ் இலக்கணங்களின் வரலாற்றையும் தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கான உரைவரலாற்றையும் கருக்கமாக அறிமுகம் செய்தல். இலக்கணங்களின் உள்ளடக்க வேறுபாடுகளையும் ஒற்றுமைகளையும் இனைத்து அறிவதற்கும் ஆராய்வதற்கும் ஏற்றவழிவகை செய்யும்படியும் தமிழ் இலக்கண மரபுமாற்றங்களை அறிந்துகொள்வதற்கு ஏற்றவகையிலும் ஒப்பிட்டுநோக்க வழிவகுத்தல்.

அலகு – 1 பழந்தமிழ் இலக்கணங்கள்

இலக்கணம் – வரையறை – சொல் வரலாறு வேறு சொற்கள் (குறி, நூல், புலன், எழுத்து, இயல்பு, முறை, மரபு) – வட சொல் மரபு– இலக்கண இயல்புகள் – முந்துநூல் மரபு – பனம்பாரனனார் பாயிரம் – முந்துநூல் – உரையாசிரியர்கள் தரும் வரையறைகள் – தொல்காப்பியமும் முந்துநூல் மரபு போற்றலும்.

அகத்தியம் – வரலாறு, அகத்தியம் பற்றிய குறிப்புகள் – பிற்கால அகத்திய நூல்கள்.

தொல்காப்பியம் – தொல்காப்பியர் வரலாறு – தொல்காப்பியப் பழமை– சமயம், காலம் – அதிகார அமைப்பு – ஐந்திலக்கண விரிவாக்க அடித்தளம்.

இறையனார் அகப்பொருள் – நூல்வகை – பெயர் விளக்கம் – பாயிரம் – நூல் அளவு – பகுதிநூல்.

பிற்கால முந்துநூல்கள் – அவிநயம் – காக்கைப்பாடினியம் – சங்கயாப்பு – சிறுகாக்கைப் பாடினியம் – நத்தத்தம் (நற்றத்தம்) – பல்காயம் – பன்னிருபடலம் – மயேச்சுரர் யாப்பு – இந்நூல்களின் இயல்புகள்.

அலகு – 2: 7ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையிலான இலக்கணங்கள்

புறப்பொருள் வெண்பாமாலை – ஐயனாரிதனார் சமயம், காலம் – நூலமைப்பு.

தமிழ் நெறிவிளக்கம் – நூல் இயல்பு – அகப்பொருள் வேறுபாடுகள் – காலம்

யாப்பருங்கலம் – அமிதசாகரர் – வரலாறு சமயம் காலம், நூல்அமைப்பு.

யாப்பருங்கலக்காரிகை – அமிதசாகரர் – நூல் அமைப்பு – யாப்பருங்கலத்துடனான வேறுபாடுகள் – நூல் சிறப்பு.

வீரசோழியம் – புத்தமித்திரர் காலம், சமயம் – நூல் அமைப்பு – நூலின் தனித்தன்மைகள் –தண்டி வீரசோழியம் ஒப்பீடு.

இந்திரகாவியம் – இந்தியகாளியார் சமயம், காலம்.

நேமிநாதம் – குணவீரபண்டிதர் சமயம், காலம் – நூல் இயல்பு

வெண்பாப்பாட்டியல் – குணவீரபண்டிதர் – நூல் அமைப்பு

தண்டியலங்காரம் – காவியதரசன வழிநூல் – தண்டி தமிழ் ஆசிரியரே– காலமும் நூல் அமைப்பும்

அலகு – 3 12 ஆம் நூற்றாண்டு இலக்கணங்களும் அதற்குப் பிந்தைய இலக்கணங்களும்

நன்னூல் – பவணந்தி முனிவர், வரலாறு, சமயம், காலம் – நூல் அமைப்பு

அகப்பொருள் விளக்கம் – நாற்கவிராசநம்பி, வரலாறு, சமயம், காலம் – நூல் இயல்பு.

களவியற்காரிகை – பெயர்க்காரணம் – நூல் இயல்பு.

பன்னிருபாட்டியல் – ஆசிரியர்கள் – பாடுபொருள் – நவநீதப் பாட்டியல் முதலான நூல்களின் வரலாறு அமைப்பு.

மாறனலங்காரம் – திருக்குருகைப் பெருமாள் கவிராயர் வரலாறு, நூல் இயல்பு.

மாறனகப் பொருள் – மாறனகப் பொருள் பாப்பாவின் ஆசிரியர் – நூல் இயல்பும் பொருளும்.

சிதம்பர செய்யுட் கோவை – குமரகுருபரர் வரலாறு – நூற்செய்தி.

பிரயோகவிவேகம் – சுப்ரமண்ய தீட்சிதர் காலம் – நூல் இயல்பு.

இலக்கணவிளக்கம் – வைத்தியநாத தேசிகர் வரலாறு – நூல் இயல்பு.

இலக்கண விளக்கச் சூறாவளி சிவஞான முனிவர் – இலக்கணவிளக்கம் கண்டனம்.

இலக்கணக் கொத்து – சுவாமிநாததேசிகர் வரலாறு காலம் – நூல் இயல்பு

தொன்னூல் விளக்கம் – வீரமாமுனிவர் வரலாறு – நூலியல்பு – வேறுபாடுகள்.

முத்துவீரியம் – முத்துவீர உபாத்தியாயர் சமயம் காலம் – நூல் இயல்பு.

சுவாமிநாதம் – சுவாமிகவிராயர் வரலாறு – நூல் இயல்பு.

அறுவகை இலக்கணம், விருத்தப்பாவியல், மாணவர் தமிழ்இலக்கணம், தமிழ் இலக்கணக் கும்மி, தமிழ் நூல், யாப்பூநூல், திருக்கோவைக்கிளவிக் கொத்து, திருக்கோவைக் கொளு போன்றவை. உரைநடையில் அமைந்த இலக்கண

நூல்கள்.

அலகு – 4 உரை வரலாறு – இலக்கண உரைகள்

உரையின் தோற்றமும் வளர்ச்சியும் – உரையின் பொது இலக்கணம் – உரைவகைகள் – இறையனார் அகப்பொருள் உரை வரலாறும் உரையியல்புகளும் – தொல்காப்பிய உரைகள் – இளம்பூரணர் சேனாவரையர் பேராசிரியர் தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைகள் – புறப்பொருள் வெண்பாமாலை சாமுண்டி தேவநாயகர் உரை – யாப்பருங்கல விருத்தியுரை – வீரசோழியம் பெருந்தேவனார் உரை – தண்டியலங்கார உரை – நன்னூல் – மயிலைநாதர் ஆண்டியப்புலவர் சங்கரநமச்சிவாயர் சிவஞானமுனிவர் கூழங்கைத் தம்பிரான் இராமானுசகவிராயர் விசாகப் பெருமாள் ஐயர் ஆறுமுகநாவலர் சடகோபராமாநுசாச்சாரியார் ஆகியோர் உரைகள் – நம்பியகப் பொருள் உரை – களவியற்காரிகை பன்னிருபாட்டியல் நூல்களின் உரைகள் – பிரயோகவிவேகம் தொன்னூல்விளக்கம் முத்துவீரியம் ஆகிய நூல்களின் உரைகள்.

அலகு – 5 இலக்கிய உரைகள்

பத்துப்பாட்டு உரைகள் நச்சினார்க்கினியர் உரை – திருமுருகாற்றுப்படை உரைகள் – பழைய உரைகள் பிற்கால உரைகள் – எட்டுத்தொகை உரைகள் – நற்றிணை பின்னத்தூர் நாராயணசாமி உரை ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை– குறுந்தொகை பழைய உரைகள் பிற்கால உரைகள் – ஐங்குறுநூற்றுப் பழைய உரைகள் – அகநானூறு பால்வண்ணத்தேவர் இயற்றிய பழைய உரை குறிப்புரைகள் – புறநானூறு பழைய உரை ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை – பதினெண்கீழ்க்கணக்கு உரைகள்– நாலடியார் உரைகள்– திருக்குறள் உரைகள் தருமர் மணக்குடவர் பரிமேலழகர் உள்ளிட்டோர் உரைகள்– காப்பிய உரைகள்– சிலப்பதிகார அரும்பதஉரை அடியார்க்குநல்லார் உரை– நீலகேசி சமய திவாகரமுனிவர் உரை– சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியர் உரை– திருக்கோவையார் பழைய உரை– தக்கயாகப்பரணி மூவருலா பழைய உரைகள்– கல்லாடம் மயிலேரும் பெருமாள்பிள்ளை உரை– நாலாயிர திவ்யபிரபந்த வியாக்கியானங்கள்– கம்பராமாயணஉரை, பெரிய புராணம் உரை.

பாடநூல்கள்

இலக்கண வரலாறு, 1999. இரா.இளங்குமரன், மணிவாசகர் பதிப்பகம்,

சென்னை.

உரையாசிரியர்கள், 1995. மு.வை.அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பார்வை நூல்கள்

அடியார்க்குநல்லார் உரைத்திறன், 1976. ச.வே.சுப்பிரமணியன், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

இலக்கணவரலாறு, 1963. சோம.இளவரசு, தொல்காப்பியர் பதிப்பகம், சிதம்பரம்.

இலக்கணவரலாறு, 1999, இரா. இளங்குமரன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

இளம்பூரணர்– சொர்ணம்மாள்நினைவுச் சொற்பொழிவுகள், 1981. மு.அருணாசலம், அண்ணாலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம், (ஆண்டில்லை). திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

உரையாசிரியரும் திறனாய்வுக் கோட்பாடுகளும், 1999. கி. ஆதிநாராயணன், சித்தரா நிலையம், சென்னை.

திருக்குறள் உரைகள் காட்டும் பொருள்நெறி, 2002. ப.கொழந்தசாமி, பாரதி புத்தகாலயம், சென்னை

தெய்வச்சிலையார் உரைத்திறம், 1986. சோ.ந.கந்தசாமி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், 1985. இ.சுந்தரமூர்த்தி, ஐந்திணைப்பதிப்பகம், சென்னை.

வினாக்கள் பாடநூல்களிலிருந்து மட்டுமே அமைதல் வேண்டும்.

C = Core Paper. E = Elective Paper

முதுகலை தமிழ்-இரண்டாம் பருவம்

தாள்-6 தொல்காப்பியம்-சொல்லதிகாரம்

நோக்கம்:

1. எழுத்துக்களால் ஆகிய சொற்கள் தொடராகும்.
2. சொற்களின் நிலை அதில் இடம்பெறும் சொற்களின் வகைப்பாடு ஆகியவற்றை விளக்குதல்.
3. வேற்றுமைகளின் வகைபாடுகள் அவற்றின் உருபுகள் பற்றியும் விளக்குதல்.
4. எச்சப்பொருள்களின் இயல்புகளும் சொல்வகைகளும் உணர்த்தப்படுகிறது சொல்.
5. இலக்கணங்களைப் பேசுவது சொல்லதிகாரம் இவற்றை பற்றி கற்பித்தல்.

அலகு-1 கிளவியாக்கம், வேற்றுமையியல்

அலகு-2 வேற்றுமை மயங்கியல், விளி மரபு

அலகு-3 பெயரியல், வினையியல்

அலகு-4 இடையியல், உரியியல்

அலகு-5 எச்சவியல்

பாடநூல்கள்:

1. தொல்காப்பியம்-ஆராய்ச்சிக் காண்டிகையுரை சொல்லதிகாரம்-1988 பாவலரேறு ச. பாலசுந்தரனார் (உரை) பெரியார் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை, சேலம்.

பார்வை நூல்கள்:

1. இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், 1976 மோ. இசரயேல், மதுரை.
2. இலக்கண ஆய்வு வினைச்சொல், 1976 மோ. இசரயேல், மதுரை.
3. இடையும் உரியும், 1977 மோ. இசரயேல், மதுரை.

4. இலக்கண உலகில் புதிய பார்வை, மூன்று தொகுதிகள், 2001. பொற்கோ, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடேட், சென்னை.
5. சொல்லியல், 1985. சூ. இன்னாசி, அபிராமி பப்ளி கேஷன்ஸ், சென்னை.
6. சொல்லிலக்கணக் கோட்பாடு-1, தொல்காப்பியம் முதல் பகுதி, 1984.
7. சொல்லிலக்கணக் கோட்பாடு-2, தொல்காப்பியம் இரண்டாம் பகுதி, 1986. சே.வை. சண்முகம், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.
8. சொல்லிலக்கணக் கோட்பாடு-3, தொல்காப்பியம் வினையும் இடையும், 1992. சே.வை. சண்முகம், மணிவாசகர் பதிப்பகம் சென்னை.
9. தமிழிலக்கணக் கோட்பாடுகள், 1989. பொற்கோ.தமிழ் நூலகம், சென்னை.

தொல்காப்பியம் சொல்லதிகாரம்

கற்றபின் மாணவர் அடைந்த பயன்கள் (**outcomes**)

அலகு-1

கிளவியாக்கம், வேற்றுமையியல்

கிளவியாக்கம்-சொற்கள் வாக்கியமாக அமையும் முறையைக் கூறுதல்.

வேற்றுமையியல்-வேற்றுமை உருபுகள் இன்னின்ன பொருளில் வரும் என்பதை விளக்குதல்.

முதல் இயவாகக் கிளவியாக்கம் அமைந்துள்ளது எவ்வாறு பேசுவது? எவ்வாறு எழுதுவது? சொற்களை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்று பல செய்திகளை மாணவர் தெரிந்து கொள்கிறான்.

அலகு-2

வேற்றுமை மயங்கியல்ஈ விளி மரபு

வேற்றுமை மயங்கியல்-வேற்றுமை உருபுகள் ஒன்றுக்கொன்று மயங்கி வருதலைக் கூறுதல்.

விளி மரபு-சொற்கள் விளியேற்கும் இயல்பினை உணர்த்துதல்.

வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு ஆகிய மூன்று இயல்களிலும் வேற்றுமைத் தொடர் பற்றி இலக்கணம் விரித்துரைக்க படுகிறது. இயலின் தலைப்புகளே செய்திகளைத் தெளிவுப்படுத்துகின்றன என்பதை மாணவர்கள் அறிந்து கொண்டமை.

அலகு-3

பெயரியல், வினையியல்

பெயரியல்-சொற்களின் சிறப்பு, பெயர்ச்சொல், உயர்திணை, அ.ஃறிணை, விரவுப்பெயர் போன்றவற்றை விளக்குதல்.

வினையியல்-வினைச்சொல்லின் தன்மையை விரித்துக் கூறுதல்.

உலகம் முழுவதும் சொற்களைப் பெயர், வினை, உரி என்ற நிலையில் தான் பகுத்துள்ளனர் பெயர்ச் சொற்களின் இலக்கணத்தைப் பெயரியலிலும், வினைச் சொற்களின் இலக்கணத்தை வினையியலிலும், இடைச் சொற்கள் தமிழகத்தில் வழங்கி வரும் வாழ்க்கை இடையியலிலும், தமிழுக்கு அடிச் சொற்களாக (roots)

அமைவனவற்றை உரியியலிலும் உள்ளதை கூறுவதைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டமை.

அலகு-4

உரியியலும் மரபியலும் தான் பிற்காலத்தில் தோன்றியுள்ள நிகழ்வுகள், அகராதிகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைகின்றன என்பதை மாணவர்கள் தெரிந்து கொண்டமை.

அலகு-5

எட்டு இயல்களிலும் சொல்லப் பெறாத சொல்லிலக்கணத்தில் எஞ்சியுள்ள செய்திகளை பற்றி எச்சவியலில் கூறப்படுவது பற்றி மாணவர்கள் அறிந்துக் கொண்டமை.

தாள்-7 காப்பியங்கள்

நோக்கம்:

காலந்தோறும் தமிழ்க் காப்பியங்களின் வளர்ச்சியையும்,கொள்கைப் பின்னணிகளையும் அறிவதுடன்,அவை காட்டும் சமுதாய மாறுதல்களையும்,இலக்கியக் கோட்பாடுகளை சுருக்கமாக அறிமுகப்படுத்தி வைத்தல்.

அலகு-1

சிலப்பதிகாரம்-(புகார்க்காண்டம்) இந்திரவிழா ஊர் எடுத்த காதை,கடலாடுகாதை,கானல் வரி,வேனில் காதை.

மணிமேகலை-ஆதிரை பிச்சையிட்ட காதை.

அலகு-2

பெருங்கதை-(வத்தவகாண்டம்)12-பந்தடி கண்டது,13-முக எழுத்துக் காதை

சீவகசிந்தாமணி-கேமசரியார் இலம்பகம்

அலகு-3

கம்பராமயணம்-(கிட்கிந்தா காண்டம்) அனுமன் படலம்.

பெரியபுராணம்-சண்டேசுர நாயனார் புராணம்.

அலகு-4

திருவரங்க திருவிளக்கு-கருணைக் கடல் இராமனுசர் காவியம் சிற்பி(பக்-195-265) அரங்க மாநகர் அழைக்கிறது முதல் நிறைவேறிய இரண்டு வாக்குறுதிகள் வரை.

அலகு-5

ஏசு காவியம்-(ஐந்தாம் பாகம்)-மகிமை

சீறாப்புராணம்-ஹிஜ்றத்துக் காண்டம்(ஒட்டகை பேசியப் படலம்)

பார்வை நூல்கள்:

1. காப்பியப் பார்வை-1987 வ.சு.ப. மாணிக்கம், மணிவாசகர் பதிப்பகம்-சிதம்பரம்

2. காப்பியப் பார்வைகள், 1983, சொ. சிங்கார வேலன், ஞானவேல் பதிப்பகம்-மயிலாடுதுறை.
3. சிலப்பதிகாரம்,மணிமேகலை,காப்பிய மரபு,1977 கோ. இலட்சுமணசாமி அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
4. தமிழர் பண்பாடு,கம்பன் காவியம்,1933 எஸ் வையாபுரி பிள்ளை, வையாபுரி பிள்ளை நினைவு மன்றம், வையகம்,2-நாலாவது குறுக்குத் தெரு,இராஜா அண்ணாமலைபுரம்-சென்னை.
5. தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம் திராவிட மொழிகளில் ஆராய்ச்சி,1991, எஸ்.வையாபுரிபிள்ளை, வையாபுரி பிள்ளை நினைவு மன்றம்-வையகம்-2.
6. தமிழ் காப்பியம் கொள்கை முதல் தொகுதி மற்றும் இரண்டாம் தொகுதி துரை. சீனிச்சாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம்-தஞ்சாவூர்.
7. மணிமேகலைக் காப்பியக் கதையும் பிற இயைபுக் கதைகளும்-ஓர் ஒப்பாய்வு 2001, ஓய். டென்னிசன், மெரில் பதிப்பகம்-திருச்சிராப்பள்ளி.
8. திருவரங்க திருவிளக்கு-கருணைக் கடல் ராமானுஜர் காவியம்-சிற்பி(காவ்யா வெளியீடு) பக்-(195-265).

குறிப்பு:

அலகு-4 இராமனுசர் காவியம் பற்றிய விவரங்களை www.Periyar University.ac.in v<w lizajs kftcaes gh@ji bfhysi<<.

முதுகலை தமிழ் - இரண்டாம் பருவம்
தாள் - 8 – சமய இலக்கியங்கள் (TMLC08)

நோக்கம் (Objects)

1. திருமந்திரத்தில் திருமூலர் நிலையாமையை எடுத்துரைத்தல்.
2. சைவக்குரவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரின் பாடல்கள் வழி பக்தி மார்க்கத்தை கற்பித்தல்.
3. வைணவ ஆழ்வார்களில் குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிய மூவரின் பாடல்கள் வழி பக்தியை விளக்குதல்.
4. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாளின் பக்தி சிறப்பினை எடுத்துரைத்தல்.
5. பட்டினத்தார், வள்ளலார், வேதநாயகம்பிள்ளை, குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களின் வழி சமய இலக்கியங்கள் எவ்வாறு மறுமலர்ச்சியுற்றது என்பதை அறியச்செய்தல்.

கற்றபின் மாணவர் அடைந்த பயன் (Outcomes) :

அலகு-1

திருமூலர் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமையைக் கூறி நிலையான புண்ணியம் செய்யத்தூண்டுதல். காரைக்காலம்மையாரின் சிறப்பினை எடுத்துரைத்தல்.

அலகு-2

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சைவக்குரவர்களின் சிவ பக்தியை உணர்த்துதல்.

அலகு-3

வைணவ ஆழ்வார்களாகிய குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகிய மூவரின் பக்தி நெறியினை எடுத்துக்கூறி பின்பற்ற செய்தல்.

அலகு-4

ஆண்டாள் பெண்கள் மேற்கொள்ள வேண்டியப பாவை நோன்பின் சிறப்பினை எடுத்துக்கூறி, நோன்பினை மேற்கொள்ளச் செய்தல்.

அலகு-5

இந்து மதம், கிருத்துவ மதம், இசுலாமிய மதம் ஆகிய மூன்று மத நூல்களின் சிறப்பினை எடுத்துக்கூறி ஒற்றுமை உணர்வினை இதன் மூலம் அறியச்செய்தல்.

அலகு-1 :

திருமந்திரம் : முதல் தந்திரம் 'யாக்கை நிலையாமை' 'இளமை நிலையாமை'

காரைக்காலம்மையார் : அற்புத திருவந்தாதி -21 முதல் 40 பாடல்கள்

அலகு-2 :

திருஞானசம்பந்தர் - 1. முதல் திருமுறை : திருக்கழுக்குன்றம் பதிகம் தோடுடையான் எனத் தொடங்கும் - 10 பாடல்கள்

2. மூன்றாம் திருமுறை – திருப்பட்டீச்சரம் பதிகம் 'பாடல் மறை' எனத் தொடங்கும் 11 பாடல்கள்

திருநாவுக்கரசர் - 1. நான்காம் திருமுறை – திருவண்ணாமலை பதிகம் 'ஓதிமா மலர்கள்' – எனத்தொடங்கும் 10 பாடல்கள்

2. நான்காம் திருமுறை – திருநாகேச்சரம் பதிகம் 'கச்சைசேர் அரவர் போலும்' – எனத் தொடங்கும் 10 பாடல்கள்

சுந்தரர் - 1. ஏழாம் திருமுறை – 'திருவெண்ணெய்நல்லூர்' பதிகம் 'பித்தா பிறைசூடி' எனத் தொடங்கும் 10 பாடல்கள்

2. திருவாரூர் பதிகம் 'பத்திமையும் அடிமையையும்' எனத் தொடங்கும் 12 பாடல்கள்

அலகு-3 :

குலசேகர ஆழ்வார் - 1. திருவேங்கடத்தில் பிறத்தலும் இருத்தலும் போதியது எனல் 11-பாடல்கள்
'ஊன்ஏறு செல்வத்து' எனத் தொடங்கும் பாடல்

திருமங்கை ஆழ்வார் - 2. பெரிய திருமந்திரத்தின் மகிமை – 10 பாடல்கள் "வாடினேன் வாடி வருந்தினேன்" எனத் தொடங்கும் பாடல்

3. தொண்டரடிப்பொடியாழ்வார்-திருப்பள்ளி எழுச்சி-10 பாடல்கள் 'கதிரவன் குணதிசைச் சிகரம்' எனத் தொடங்கும் பாடல்

அலகு-4 :

ஆண்டாள் - திருப்பாவை 30 பாடல்கள்

அலகு-5 :

1. பட்டினத்தார் - திருத்தில்லை – 'சோறிடு நாடு' எனத் தொடங்கும் பாடல்கள் - 20

2. வள்ளலார் - பிள்ளைப்பெருவிண்ணப்பம்
3. வேதநாயகம் பிள்ளை – பெண்மதி மாலை
4. குணங்குடி மஸ்தான் சாகிபு – 26 - 50 கண்ணிகள் - பராபரக்கண்ணி

முதுகலை தமிழ் – இரண்டாம் பருவம்

தாள் –9–பண்பாட்டு மானிடவியல் (TMLC 09)

நோக்கம் : மானிடரின் பண்பாட்டு நிலை அறிதல் – பண்பாட்டு நிலையில் உயர்ந்து நின்றோர் நிலை அறிதல் – மானிடர் வாழ்ந்த நிலையினையும் வாழவேண்டிய நிலையினையும் அறிதல்

அலகு – 1

மானிடவியல் தோற்றமும் வளர்ச்சியும் – சாக்ரடீஸ் – பிளேட்டோ– அரிஸ்டாடில் – புத்தாய்வுக்காலம் – அறிவொளிக்காலம் – இந்தியாவில் மானிடவியல் வளர்ச்சி.

அலகு – 2

உடல்சார் மானிடவியல் –இனவியல் – மானிட உடல் அளவையியல் – மனித சூழலியல் – உளவியல்சார் மானிடவியல் – மொழியியல் பண்பாட்டு மானிடவியல்.

அலகு – 3

மானிடவியலும் களப்பணியும் – களப்பணியில் தரவுகளைப் பெறுதல் – தரவுகளைப்பகுத்து ஆய்தல் – ஒப்பீட்டு முறை.

அலகு – 4

பண்பாட்டின் உட்கூறுகள் – உட்கூறுகளின் தன்மைகள் – பண்பாட்டின் அமைப்பு – பண்பாட்டுப் பொதுமை – பண்பாடு ஒரு நடத்தை சார் முறை.

அலகு –5

பழங்குடி அமைப்பு – தமிழகப்பழங்குடியின் பண்பாட்டு மாற்றம் – இனக்குழு – சாதிகள் – சாதிக்கொள்கைகள் – சாதி பற்றிய நவீன கோட்பாடுகள்.

பாடநூல்

பண்பாட்டு மானிடவியல்,

பக்தவத்சல பாரதி.

மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பார்வை நூல்

1. கே.ஏ. குணசேகரன், தமிழக மலையின மக்கள்.

2.தமிழர் மானிடவியல்,பக்த வத்சல பாரதி, அடையாளம், சென்னை.

3. மானிடவியல் கோட்பாடுகள், பக்தவத்சல பாரதி பதிப்பகம், அடையாளம்
குத்தநத்தம் - 621310 திருச்சி மாவட்டம்.

4. இலக்கிய மானிடவியல், பக்தவத்சல பாரதி, அடையாளம் பதிப்பகம்
குத்தநத்தம் - 621310 திருச்சி மாவட்டம்.

5. வரலாற்று மானிடவியல், பக்தவத்சல பாரதி, அடையாளம் பதிப்பகம்
நத்தம் - 621310 திருச்சி மாவட்டம்.

6, பாணர் இன வரைவியல், பக்தவத்சல பாரதி, அடையாளம் பதிப்பகம்
நத்தம் - 621310 திருச்சி மாவட்டம்.

முதுகலை தமிழ் இரண்டாம் பருவம்

தாள்:10 நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் (EDC-I)

பாட நோக்கம் (Objects)

- நாட்டுப்புறவியலின் தேவையைத் தேவையை உணர்த்தல் - நாட்டுப்புற இலக்கியங்கள், கலைகள் ஆகியவற்றை அறிந்து பாதுகாத்தல்.
- நாட்டுப்புறவியல் சார்ந்த கோட்பாடுகளை விளக்குதல்.
- நாட்டுப்புறங்களில் அழிந்து வரும் பாடல்கள் பண்பாடு நாகரிகம் பழக்க வழக்கம் ஆகியவற்றை பாதுகாத்தல்.
- பாமர மக்களின் இலக்கிய இலக்கண உத்திகள் அறிதல் என்பனவாகும்.

கற்றபின் மாணவர் அடைந்த பயன் (Outcomes)

அலகு - 1

நாட்டுப்புறவியல் என்ற சொல்லின் விளக்கம் - Folk, Lore என்ற சொற்களின் விளக்கம் - தமிழ்ச் சூழலில் இச்சொல் பயன்படுத்தப்பெறும் முறைகள், நாட்டுப்பறவியலின் வகைகள், நாட்டுப்புறவியலும் வரலாறும்.

அலகு - 2

வாய்மொழி இலக்கியம், நாட்டுப்புறக்கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், (தாலாட்டு, சிறுவர், ஒப்பாரிப் பாடல்கள்) - கதைப்பாடல்கள் (வரலாறு, நமூகக் கதைப்பாடல்கள்.

அலகு - 3

பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுகள் - களப்பணிகள், நாட்டுப்புறக்கலைகள், கரகம் காவடி, தெருக்கூத்து.

அலகு - 4

கோட்பாடுகள் - விளக்கம், தோற்றம், வளர்ச்சி நிலைகள், அமைப்பியல் கோட்பாடு, வாய் மொழி வாய்பாட்டுக் கோட்பாடு.

அலகு - 5

அண்ணன்மார் சாமி கதை

பாட நூல்கள்

1. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், தே.லூர்து, பாளையங்கோட்டை, 2000.
2. நாட்டுப்புறவியல் ஆய்வு, சு.சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1992.

3. நாட்டுப்புறவியல், சு.சண்முகசுந்தரம், காவ்யா நூலகம், சென்னை.
4. கொங்கு நாட்டு வரலாறும்,அண்ணன்மார்சாமி வழிபாடும் - ப.கிருஷ்ணசாமி (காவ்யா வெளியீடு)

பார்வை நூல்கள்

1. நாட்டுப்புற இயல், ஆறு.இராமநாதன்,மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1992.
2. நாட்டுப்புற இலக்கிய வரலாறு, சு.சண்முகசுந்தரம், மணிவாசகர்.
3. தமிழக நாட்டுப்புற ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக ஹவுஸ் வரைவேட் லிமிடெட், சென்னை. 2010.
4. The Study of Folklore, Allan Dundes. 1965.
5. நாட்டுப்புறவியல் கோட்பாடு, திருநாகலிங்கம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.
6. அண்ணன்மார் சாமிக் கதை - சக்திகனல் பதிப்பு.

முதுகலை தமிழ் இரண்டாம் பருவம்

தாள்:10 கணினி ஓர்அறிமுகம் (EDC-II)

பாட நோக்கம் (Objects)

- மாணவர்களுக்குக் கணினி பயன்பாடுகள் அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம்.
- தற்காலம் கணினி உலகமாக மாறிக்கொண்டு வருவதால் கணினி வழி கற்றல், கணினி வழி தேர்வு, எழுதுதல், நேர்காணல் செய்தல், நூலகம் கற்றல், நூல்கள் தேடுதல், கணினி வன்பொருள் மென்பொருட்கள் அறிதல், கணினி கலைச்சொற்கள் உருவாக்குதல்.
- இணையதள சேவைகள் உலகளாவிய வலைப்பூக்கள் தேடுதல் இ - வாணிபம் செய்தல், அனிமேசன் உருவாக்குதல், வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் ஆகியன கற்று மாணவர்கள் தெளிவடையும் பொருட்டு கணினி வழி கற்றல் முறை கல்வி முறையில் கொண்டுவருதல்; நடைமுறைபடுத்தல் ஆகியன இதன் முக்கிய நோக்கமாகும்.

கற்றபின் மாணவர் அடைந்த பயன் (Outcomes)

அலகு - 1 கணினி அறிமுகம்

வரலாறு, பயன்பாடு , பாகங்கள் - ஈடுவரலகம், மையச்செயலகம், விடுவரலகம், தனிநபர், கணிப்பொறி, அச்சுப்பொறி, தகவல் தொழில்நுட்பம், செயல் திட்டம், மென்பொருள் தொழில் நுட்பம் அறிந்துக் கொண்டமை.

அலகு - 2 மின்னஞ்சல்

மின்னஞ்சல் - மின்னஞ்சல் கருவிகள், தொலை எழுதி, அனுப்பும் முறை, நகலி, வரலாறும், செயல்படுத்தும் முறை, தொலை உரை அமைப்பை அறிதல்.

அலகு - 3 இணையம்

வலைப்பின்னல், குறும்பரப்பு, வலைப்பின்னல், பயன்பாடு, விரிபரப்பு, வலைப்பின்னல், இணையம் விளக்கம், வரலாறு, வளர்ச்சி, இணையத்தில் இணையும் முறைகள், நேரடித் தொடர்பு, சேவை நிறுவனத்தின் மூலமான தொடர்பு, பிற சேவை நிறுவனவழி மறைமுகத் தொடர்பு, இணைய இயக்க முறை, இணைய முகவரி, இணையத் தகவல் வகைகள், மீகை உரை அறிந்துக்கொண்டமை.

அலகு - 4 கணினி வழி தமிழ்க் கற்பித்தல்

கணினியின் துணையோடு மொழி கற்றல், மென்பொருள் கற்பித்தல், செயல்பாட்டு வழியமைப்புத் தொகுதி, ஆக்கவழியமைப்புகள், வழியமைப்பு, கற்பித்தல் வழியமைப்பு, மதிப்பீட்டு வழியமைப்பு, கற்பித்தல் அகராதிகளை அறிந்தமை.

அலகு - 5 தமிழ் மென்பொருள்

தமிழ்மென்பொருள், சாளரம் 2000 அடிப்படைக் கருத்துக்கள், கோப்பு உருவாக்கம், கோப்புகளைக் கையாளும் முறைகள், கோப்புச் சேமித்தல், பெயரிடுதல், பெயர் மாற்றம் செய்தல், செய்தியேற்றமும் திருத்தமும், தட்டச்சிடுதல், இடைச்செருகல், செய்தியை அடைப்பிடுதல், அடைப்பிடத்தை அழித்தல், இடம் பெயர்த்தல், நகல் செய்தல், படிவமாக்குதல், எழுத்துக்கள் தெரிவு அளவு மாற்றம், தடித்த எழுத்து சாய்வெழுத்து, அடிக்கோடு, வழி இடைவெளி அமைப்பு, சொற்களைக் கண்டறிந்து மாற்றுதல், உரையாடல் பெட்டிகள் கையாளும் முறை போன்றவற்றை அறிந்தமை.

பாடநூல்கள்:

1. கணிப்பொறி தகவல் தொழில் நுட்பம் 1998, ச.பாஸ்கரன், உமா பதிப்பகம், தஞ்சாவூர். (உரிய பகுதிகள்)

2. தகவல் தொழில் நுட்பம் 1998, இராம்குமார், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை. (உரிய பகுதிகள்)

3. இயற்கை மொழியாய்வு - தமிழ், 1988. கு.சுப்பையாபிள்ளை, உலக தமிழராய்ச்சி, நிறுவனம், அடையாறு, சென்னை.

4. கணிப்பொறி அமைப்பும் இயக்கமும், பயன்பாடுகளும்,க.அர.பழனிசாமி, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

5. கணினி - ஓர் அறிமுகம். எஸ்.வெங்கடாசலம், சுவுத் ஆசியன் புக்ஸ், தமிழ் நாடு, சர்வீஸ் பாரம், சென்னை.

6. தகவல் தொடர்பியல், 2000, வெ.கி. கிருட்டிணசாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

மேற்காண் பாடத்தாள், தேசியத் தரநிர்ணய அங்கீகார நிறுவனம் (NAAC) கேட்டுள்ள அமைப்பின்வழி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறே அனைத்து தாள்களும் அமைக்கப்படுமாயின், NAAC

முதுகலை தமிழ் இரண்டாம் பருவம்

தாள்:10 பயன்பாட்டுத் தமிழ் (EDC-III)

பாட நோக்கம் (Objects)

- மாணவர்கள் பேசும்போது, எழுதும் போதும் இலக்கணம் பிழையின்றி எழுதுதல் வேண்டும்.
- ஊடகத்தமிழ்ச் செய்திகள் அறிதல் வேண்டும்.
- நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டை அறிதல், கதை, கட்டுரை, கவிதை, ஆராயச்சிக் கட்டுரை எழுதும் போதும், நேர்காணல் போதும் கடைப்பிடிக்க வேண்டிய இலக்கணங்களை அறிதல் பொருட்டும் இப்பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கற்றபின் மாணவர் அடைந்த பயன் (Outcomes)

அலகு - 1

இக்கால தமிழின் இயல்புகள், சந்திவிதிகள், சந்தி - வரையறை, சந்தியின் தேவை, சந்தி வகைப்பாடுகள், அகச்சந்தி, புறச்சந்தி, சொற்சந்தி வருமிடங்கள், வல்லிம மிகும் இடங்கள், மிகா இடங்கள், நில தனிக் குறிப்புகள், பழஞ்சந்தி இக்காலச சந்தி வேறுபாடுகள், சிறப்புச் சந்தி விதிகள், நிறுத்தற்குறிப் பயன்படும் சந்தி அறிதல்.

அலகு - 2

நிறுத்தற்குறிகள் பயன்பாடு, சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும் முறைகள், பேச்சும் கால இடைவெளியும் நிறுத்தற்குறிகளும், நிறுத்தற்குறிகள் காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, புள்ளி, முப்புள்ளி, கேள்விக்குறி, உணர்ச்சிக்குறி, இரட்டை ஒற்றை மேற்கோள் குறிகள், மேற்படிக்குறி, அடைப்புக் குறிகள், பிறை அடைப்பு, சதுர அடைப்பு, இணைப்புக் கோடு, இணைப்புச் சிறுகோடு, சாய்கோடு, அடிக்கோடு, உடுக்குறி) இவற்றின் முறையான பயன்படுத்த முறைகள், சொற்களைந் சேர்த்தும் பிரித்தும் எழுதும் முறைகள்,

நீண்ட சொற்கள், ஒரே சிராக எழுதாத நிலை, இடம் போதாத போது பிரித்தல், பொதுவான சொற்பிரிப்பு நெறிமுறைகள், இலக்கண அமைப்புச் சொற்கள், பெயர், உடம்படுமெய், அம்ஏற்ற பெயர் + பெயர், பெயரடை + பெயர் + இடைச்சொல், பெயர் + வினை, வினையடி + பெயர், வினை + வினை, வினை எச்சம் + வினை இரட்டைச் சொற்கள் தனிச் சொற்கள் (அருகில், அருகே, அளவு, அளவில்,அளவிற்கு, இடையே, போன்றவை) எழுதும் முறை சொற்றொடர் பிரிப்பும் தவறுகளும், வாக்கிய வகைகளும் முறைகளும்.

அலகு - 3

நடைமுறை சார் மொழித் திறன்கள் (எழுத்துத் திறன்கள்)

செய்திக் கடிதம் ஆவணம் எழுதும் முறைகள்.

செய்தி (NEWS) எழுதும் முறைகள் - செய்திக் கட்டமைப்பு, தலைப்பு, முகப்பு, உடல், செய்தியில் மொழிப் பயன்பாடு.

செய்திக் கட்டுரை தலைப்புத் தெரிவு, தகவல் சேகரிப்பு வகைகள், தமிழில் நெகிழ்வுரை எழுதும் முறை, நெகிழ்வுரையில் மொழிப் பயன்பாடு.

கருத்துரைகள், தலையங்கம், நூல் மதிப்புரைகள், கடிதம் ஆவணம் எழுதும் முறைகள்.

கடித வகைகள், வணிகக்கடிதம், தகவல் கடிதம், விற்பனைக் கடிதம், பிடிபிரச்சனைக் கடிதம், நல்லெண்ணக் கடிதம், ஆகியன எழுதும் முறைகள், அலுவலகக் கடிதம் நேர்முகக் கடிதம், அலுவல் கடிதம், நினைவூட்டும் கடிதம், உறவுமுறைக் கடிதம், எழுதும் முறைகள், ஆவணங்கள் எழுதும் முறைகள்.

அலகு - 4

சுருக்கி வரைதலும், வாமொழித் கருத்தப் பரிமாற்றத் திறன்களும்.

சுருக்கி வரைதலின் பயன்கள், முறைகள், முதல்வரைவு, செம்மையாக்கம், இரண்டாம் வரைவு, மூலத்தைச் சுருக்கல், முக்கியம் இல்லாதனவற்றை நீக்குதல், கூறியது கூறலைத் தவிர்த்தல், உரைநடை வகைகளைச் சுருக்கி வரைதல், விவரிப்பு நடை, வருணனை நடை, விவாத நடை, உரையாடல் சுருக்கம்.

வாய்மொழிக் கருத்துப் பரிமாற்றம்

உரையாடல் திறன் - தடைகள், தேவையான நல்ல குணங்கள், உரையாடல் உத்திகள், மரியாதை விளி ஒருவர் இயல்பை திறனைக் குறிப்பிடல், குறை கூட்டமை, காரணகாரிய இயைபுடன் பேசுதல், வெறுப்புத் தோன்றாத வகையில் பேசுதல்.

சொற்பொழிவுத் திறன்

நூலறிவு, சிற்தனைத் தெளிவு, திறம்பட உரைக்கும் ஆற்றல்,பேசும் பொருளில் உள்ள ஈடுபாடு, நல்ல மொழிநடையில் அமைத்தல்,காலம் இடம் என்னும் சூழல்களுக்கு ஏற்பப் பேசுதல், உண்மையுள்ளனவாக இருத்தல், தொடக்கச் சிறப்பு, இடைஇடையே துணுக்கு கூறுதல், நகைச்சுவை கூறல், முடிவில் தொகுப்புரை தருதல்.

நேர்காணல், நேர்முகத்தேர்வு, வாய்மொழி தேர்வு, செயற்பாட்டுத் திறன்களை வளர்க்கும் நெறிகள்.

அலகு - 5

கட்டுரை எழுதும் அடிக்குறிப்புத் தருதல் - துணை நூல் பட்டியல் தயாரித்தல்.

கட்டுரை வரையறை, கட்டுரையின் இயல்பு, சுருக்கமான எளிமையான மொழிப் பயன்பாடு, இனிய தொடக்கம், சிறப்பான முடிவு, சுருங்கச் சொல்லல் முதலான பத்து அலகுகள் இருத்தல், இலக்கணப் பிழை தவிர்ப்பு, கட்டுரை வகைகள், சிந்தனைக் கட்டுரை, கதைக் கட்டுரை வருணனைக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை, செய்தித்தாள் கட்டுரை, சிந்தித்தல், படித்தல் நல்ல தகவல்களைக் குறிப்பெடுத்த பத்தியமைப்பு.

அடிக்குறிப்பு - விளக்கம், அடிக்குறிப்பு, இறுதிக் குறிப்பு, அடைப்புக் குறிப்பு தரும் முறைகள் துணைநூல் பட்டியல் தகவல்கள், ஆசிரியர், வெளியான ஆண்டு நூல் தலைப்பு அல்லது கட்டுரை, வெளியிட்டவர்.

ஆசிரியர் பெயர் அகரநிரல், பழைய நூல்கள், நூல் பெயர் அகர நிரல், ஆசிரியர் பெயர் அகரநிரல், பழைய நூல்கள் பெயர் அகர நிரல், (ஆசிரியர் பெயர் அடைப்புக் குறிகள்) உரையாசிரியர் பதிப்பாசிரியர் பெயர் தருதல், கையெழுத்துப் படியில் நூல் பெயரை அடிக்கோடிட்டுக் காட்டுதல், அச்சில் நீடித்த எழுத்தில் தருதல், பிறமொழி நூல்கள், கட்டுரைகள் தனி அகர வரிசை, ஆய்வேடு, ஆய்வறிக்கை, அச்சிடப்படாதவை என்பதன் அறிகுறியாக அடைப்புக் குறிகள் தருதல், இதழ்கள் நேர்காணல், மின் ஊடகத் தகவல் தரும் முறைகள்.

பாட நூல்கள்

1. தமிழ் நடைக் கையேடு, 2001, பா.ரா.சுப்பிரமணியன் வ.ஞானசுந்தரம் (பதிப்பாசிரியர்) மொழி வெளியீடு, சென்னை.
2. தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம், 2003. பொற்கோ. பூம்பொழில் வெளியீடு, சென்னை.
3. நல்ல தமிழ் எழுத வேண்டுமா? 2000 அ.கி.பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை.

பார்வை நூல்கள்

1. அடிப்படைத் தமிழ் இலக்கணம், எம்.ஏ. சிமான். 1999 பூ.பாலசிங்கம், புத்தக நிலையம், கொழுப்பு.

2. இக்கால தமிழ் இலக்கணம், பொற்கோ. 2002, பூம்பொழில் வெளியீடு, சென்னை.
3. இக்கால தமிழ் மரபு, 1983, கு.பரமசிவம், அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை.
4. உரைநடை இலக்கணமும் கட்டுரை எழுதும் முறையும், 1999 ஞா.தேவநேயப் பாவணர், அழகுப் பதிப்பம், சென்னை.
5. தவறின்றித் தமிழ் எழுத, 2004 மருதூர் அரங்கராசன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.
6. நல்ல தமிழ் அறிவோம், 1994, தி.. முத்துக் கண்ணப்பன், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை.
7. மொழி நூல், மு.வரதராசன், 1998, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
8. மொழிப் பயன்பாடு, 2004, கா. பட்டபிராமன், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
9. வழக்குத் தமிழ், 1990, மா.நன்னன்,திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை.

முதுகலை தமிழ்-மூன்றாம் பருவம்

தாள்-12 தொல்காப்பியம்-பொருளதிகாரம்

நோக்கம்:

1. பொருளதிகாரத்துள் நுவலப்படும் பொருள்கள் அரிய பெரிய நுண் கருத்துக்கள் கொண்டமைந்தனவாகும்.
2. அகத்திணையியல் வாழக்கை துவங்கும் நிலப்பாகுபாடு முதல்பொருள்,கருப்பொருள்,உரிப்பொருள்களின் இயல்புகளை விளக்குதல்.
3. புறத்திணையில் வீரர் மேம்பாடு அரசளாவான் படைகளை இயக்கும்

2. சங்க இலக்கியத்தில் புறப்பொருள், 1986 கு.வெ. பாலசுப்பிரமணியன்,மீரா பதிப்பகம்,புதுக்கோட்டை.
3. தமிழ் காதல், 1962 வ.சு.ப மாணிக்கம்,பாரிநிலையம்,சென்னை.
4. "திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகள்", பண்டைத் தமிழ்ச்சமூகம் வரலாற்றுப்புரிதலை நோக்கி 2003. கார்த்திகேசு சிலத்தம்ப மக்கள் வெளியிடு,சென்னை.
5. தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்) 1998. சே.ஜான் லாரன்ஸ், கு.பகவதி(பதிப்பாசிரியர்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.
6. தொல்காப்பியம்-பொருட்படலம் புறத்திணையியல் 1942. ச. சோமசுந்தர பாரதியார்,மலையகம்,பசுமலை.
7. தொல்காப்பியம்-பொருட்படலம் மெய்ப்பாட்டியல்,1942. ச. சோமசுந்தர பாரதியார்,மலையகம்,பசுமலை.
8. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், இறைச்சி 1986,தமிழண்ணல் மீனாட்சி புத்தக நிலையம், சென்னை.
9. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், உள்ளுறை,1986,தமிழண்ணல் மீனாட்சி புத்தக நிலையம், சென்னை.
10. தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு,1986,தமிழண்ணல் மீனாட்சி புத்தக நிலையம், சென்னை.

(வினாக்கள் பாடநூலிலிருந்து மட்டுமே அமைதல் வேண்டும்)

தமிழ் முதுகலை – மூன்றாம் பருவம்

தாள் : 13 தமிழக வரலாறும் பண்பாடும்

நோக்கம் : மனித குலத்தில் முன் தோன்றியமூத்தகுடியினர் தமிழர். அவர்தம் வரலாறு தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டது. பண்பாடும் மிகத் தொன்மை வாய்ந்தது. இலக்கியம், கல்வெட்டு, பட்டயங்கள், அயல்நாட்டார் கடிதங்கள் ஆகியவற்றின் மூலம் பண்டைத் தமிழரின் வரலாறும் பண்பாடும் தெரிகின்றது. இன்றைய மாணவர் சமுதாயம் அவற்றை அறிவது அவசியமானது.

அலகு – 1 சங்க கால வரலாறு

வரலாறும் நிலப்பரப்பும் - வரலாற்றின் செல்வாக்கு - பல்வேறு காலங்களில் வரலாறு உண்டாக்கிய நாட்டுப் பிரிவுகள் - பழைய கற்காலம் - புதிய கற்காலம் - இரும்புக் காலம் - தொல்காப்பியருக்கு முற்பட்ட தமிழர் நாகரிகமும் பண்பாடும் - சங்க காலம் கி.மு.300 - கி.பி.300.

அலகு – 2 தமிழ்நாட்டு எல்லை

சங்க நூல்களில் வேங்கடம் - சோழர் காலத்தில் வட எல்லை - மூன்றாம் குலோத்துங்கன் வரை - கிருஷ்ணாதேவராயர் காலம் - பல்லவர் வரலாறு - பல்லவர் பற்றிய சான்றுகள் – களப்பிரர் - சிம்ம விஷ்ணு - மகேந்திரவர்மன் - குடைவரைக்கோவில்கள் – நரசிம்மவர்மன் - மூன்றாம் நந்திவர்மன்.

அலகு – 3 சோழர் வரலாறு

கரிகால் பெருவளத்தான் - கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சோழர் - கி.மு. முதல் நூற்றாண்டு சோழர் - சங்ககால அரசியலும் மக்கள் வாழ்க்கையும் - சோழர் எழுச்சி - பெரிய கோயில் – பாண்டியர் வரலாறு – மகாராட்டியர்.

அலகு – 4 தமிழர் நாகரிகமும் பண்பாடும்

சமுதாய வரலாறு – பொருளாதார வரலாறு – சமண சமயச் செல்வாக்கு – பௌத்த சமயச் செல்வாக்கு – இசுலாத்தின் செல்வாக்கு - கிறிஸ்தவ சமயத் தொண்டு –தமிழர் நாகரிகம் I - தமிழர் பண்பாடு - கல்வி நிலை – தமிழகக் கலைகள் - கட்டிடக் கலை - ஓவியக் கலை - சிற்பக் கலை - இசைக் கலை - நடனக் கலை - நாடகக் கலை - மருத்துவக் கலை.

அலகு – 5 ஆற்றங்கரை நாகரிகம்

காவிரிக்கரை நாகரிகம் - கலைச் சிறப்பு மட்டும் - வைகைக்கரை நாகரிகம் இலக்கியச் சிறப்பு – கலைச் சிறப்பு – ஆற்றங்கரைப் பண்பாடு - பெண்ணை நாட்டு நாகரிகம் - பொருநைக் கரை நாகரிகம் - நொய்யல் நதி நாகரிகம்.

பாடநூல்கள்

1. தமிழ்நாட்டு வரலாறு,மா.இராசமாணிக்கனார், 2008,காவ்யா பதிப்பகம், சென்னை.
2. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, மா.இராசமாணிக்கனார், 2012, காவ்யா பதிப்பகம், சென்னை.

பார்வை நூல்கள்

1. தமிழர் நாகரிகமும் பண்பாடும், அ.தட்சிணாமூர்த்தி, 1994,ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.
2. தமிழக வரலாறும் பண்பாடும், கே.கே.பிள்ளை,1971,தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.
3. தமிழர் பண்பாடும் வரலாறும், நா.வானமாமலை,1997, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
4. தமிழும் பிற பண்பாடும், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், 1999, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
5. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், க.கைலாசபதி,1999, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.
6. The Early Writing System, Dr.K.Rajan, பாண்டிய நாட்டு வரலாற்றுப் பேரவை, மதுரை – 10.
7. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், சாமி சிதம்பரனார், 1988, சாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை.
8. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்,மயிலை சீனி.வேங்கடசாமி, 2004, மணி வாசகர் பதிப்பகம், சென்னை.

தமிழ் முதுகலை – மூன்றாம் பருவம்

தாள் 14 : பெரியாரியல் (TMLC 14)

நோக்கம் :

தமிழரின் தன்மான உணர்வின் எழுச்சிக்கு ஊற்றுக்கண்ணாக அமைந்த சமுதாயச் சீர்த்திருத்த நடைமுறைகளைச் செயற்படுத்திய தந்தை பெரியாரின் வாழ்வையும் பணியையும் அவரின் சிந்தனைப் போக்குகளையும் உணர்த்துதல்.

அலகு – 1பெரியார் வாழ்வும் பணியும் :

